மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

மூன்றாந்தவணைப் பரீட்சை – 2025

தரம் 11 **பரதநாட்டியம்** **நேரம் 3.00 மணித்தியாலம்**

பகுதி I

- **மிகச் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. நமஸ்காரத்தின் போது அஞ்சலி செய்யப்படும் கடவுள்
   1. பூமாதேவி 2. சரஸ்வதி 3. பிள்ளையார் 4. முருகன்

2. யுனஸ்கோவால் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட ஆலயம்
   1. காஞ்சிகைலாசநாதர் 2. தஞ்சைப்பெருங்கோயில்
   3. மதுரை மீனாட்சி 4. திருப்பதி வெங்கடேஸ்வரர்

3. பரதநாட்டியத்திற்குப் பயன்படும் முக்கிய லய வாத்தியம்
   1. உடுக்கு 2. மிருதங்கம் 3. பறை 4. தபேலா

4. நிலைத்த தன்மையுடைய பாவம்
   1. ஸ்தாயிபாவம் 2. சாத்விகபாவம் 3. விபாவம் 4. அனுபாவம்

5. இந்தியாவின் தேசிய வாத்தியமாக கொள்ளப்படும் வாத்தியம்
   1. புல்லாங்குழல் 2. வீணை 3. வயலின் 4. தம்புரா

6. பிரமரி, சுற்றடவுகள் இடம்பெறும் சாஸ்திரிய நடனம்
   1. மணிப்புரி 2. கதக் 3. கதகளி 4. ஒடிசி

7. சதுஸ்ரமும் கண்டமும் சேரும் போது வரும் நடை
   1. மிஸ்ரம் 2. திஸ்ரம் 3. கண்டம் 4. சங்கீர்ணம்

8. வண்டினை அபிநயிக்க பியோகிக்கும் முத்திரை
   1. ஹம்சாஸ்யம் 2. பிரமரம் 3. மயூரம் 4. பதாகம்

9. கம்சன் யானை உருவெடுத்த வந்தபோது கிருஷ்ணன் அவனுடைய கொம்பை ஒடித்து ஆடிய கூத்து
   1. கொடுகொட்டி 2. துடிக்கூத்து 3. குடக்கூத்து 4. அல்லியம்

10. தெய் தெய் தாம் அடவு அமைந்த தாளம்
   1. ரூபகம் 2. மட்டியம் 3. ஆதி 4. ஜம்பை

11. தவிலின் கழி செய்யப்படும் மரம்
   1. திருவாத்தி 2. நொச்சி 3. கருங்காலி 4. முதிரை

12. நாட்டியப் பெண்ணிற்கு துணையாக இருக்க வேண்டியது
   1. பாத்திரப் பிராணன் 2. பாத்திர லக்ஷணம் 3. அபாத்திர லஷ்ணம்
   4. பாத்திர பகிப்பராணன்

13. ஒரு தாளத்தின் முழு எண்ணிக்கை முழுமையாகப் போட்டு முடித்தல்
   1. அங்கம் 2. ஆவர்த்தனம் 3. லகு 4. த்ருதம்

Past Papers Wiki

14. தாய் சேய் அன்பை வெளிப்படுத்தும் பாவம்
1. தாசிய பாவம் 2. வாத்சல்ய பாவம் 3. பக்தி பாவம் 4. மதுர பாவம்

15. ரௌத்திர ரஸத்தின் நிறம், எதிர் ரஸம் யாது

1. சிவப்பு, அற்புதம் 2. நீலம், சிருங்காரம்
3. வெள்ளை, பயானகம் 4. மஞ்சள், ரௌத்திரம்

16. கோடை விடுமுறைக் காலங்களில் யாழ்ப்பாணம் வந்து கோடை இசைப்பள்ளி நடத்தியவர்
1. பொன்னையா 2. பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
3. சின்னையா 4. க. பொன்னையாப்பிள்ளை

17. சதங்கை அணிந்து வாரத்தில் ஒரு தடவை பகல் முழுவதும் முழுக்கூத்தையும் ஆடிப்பழகுதலை எவ்வாறு அழைப்பார்
1. அரங்கேற்றம் 2. சட்டம் கொடுத்தல் 3. ஊருக்குச் சொல்லல் 4. கிழமைக் கூத்து

18. ஸ்வரங்களுக்கு ஏற்ப கோர்வைகள் அமைக்கப்பட்டு ஆடப்படும் உருப்படி
1. அலாரிப்பு 2. தில்லானா 3. ஜதிஸ்வரம் 4. பதம்

19. வான்கைலாயம் என்பது
1. பொன்மலை 2. கீரிமலை 3. இமயமலை 4. சிவனொளிபாதமலை

20. சப்தம் அமைந்த தாளம்
1. திஸ்ரசாபு 2. கண்டசாபு 3. மிஸ்ரசாபு 4. சங்கீர்ணசாபு

21. குடைவரைக் கோயில்கள் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதி
1. சங்ககாலம் 2. சங்கமருவியகாலம் 3. பல்லவர் காலம் 4. சோழர்காலம்

22. குருவுடன் சம்பாசனை இதனை அபிநயிக்கப் பயன்படும் ஹஸ்தம்
1. புஷ்பபுடம் 2. கபோதம் 3. அஞ்சலி 4. கற்கடகம்

23. நாட்டிய தர்மியாகவும் லோக தர்மியாகவும் அபிநயிக்கும் உருப்படி
1. கீர்த்தனை 2. அலாரிப்பு 3. பதம் 4. ஜதிஸ்வரம்

24. தாளத்தின் தாளவட்டம் குறிப்பது
1. சூரியன் 2. சந்திரன் 3. சரஸ்வதி 4. லக்சுமி

25. மகா காலனைக் கடவுளாகக் கொண்ட ரஸம்
1. சிருங்காரம் 2. பீபத்ஸம் 3. ஹாஸ்யம் 4. வீரம்

26. பாமாகலாபம், பாரிஜாதபகரணம் ஆகிய நாடகங்களை உள்ளடக்கிய சாஸ்திரிய நடனம்
1. குச்சுப்புடி 2. கதகளி 3. கதக் 4. ஒடிசி

27. வெண்கலத்தினாலும் உருக்கினாலும் செய்யப்பட்ட இசைக்கருவி
1. தம்புரா 2. தாளம் 3. உடுக்கு 4. வயலின்

28. திரிபுரதாண்டவம் ஆடிய இடமும் சபையும்
1. திருவலாங்காடு - சித்திரசபை 2. திருப்புத்தூர் - சிற்சபை
3. திருநெல்வேலி - தாமிரசபை 4. திருக்குற்றாலம் - சித்திரசபை

29. சோகத்தை ஸ்தாயி பாவமாகக் கொண்ட ரஸம்
1. கருணா 2. ரௌத்ரம் 3. உற்சாகம் 4. பயானகம்

30. மனவருத்தம் சோகம் உண்டாக்கும் பானம்
2. முல்லை 2. சூதம் 3. அசோகம் 4. தாமரை

- **31- 35 வரையான வினாக்களுக்கு பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**

A. சதிர் ஆட்டம், பஞ்சகச்சம்
B. பச்சை, தாடி, கரி, மினுக்கு
C. கர்நாடகஇசை, மிருதங்கம்
D. கேரள கலாமண்டலம், செண்டை
E. சித்தேந்திரயோகி, ஆந்திரா

31. கதகளி நடனத்திற்குப் பொருத்தமானவை
1. C,D ஆகியவை 2. B,D ஆகியவை 3. A,B ஆகியவை 4. C,E ஆகியவை

32. பரதநாட்டியத்திற்குப் பொருத்தமானவை
1. A,C ஆகியவை 2. D,E ஆகியவை 3. A,D ஆகியவை 4. C,B ஆகியவை

- **கீழே தரப்பட்ட அட்டவணையைக் கருத்திற் கொண்டு 33-35 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

தாளம்	அங்க அடையாளம்	ஜாதி	அட்சர எண்ணிக்கை
துருவம்	loll	A	11
B	lol	மிஸ்ரம்	16
அட	lloo	கண்டம்	C

PAST PAPERS WIKI


33. A இல் இடம்பெற வேண்டிய ஜாதி
1. மிஸ்ரம் 2. கண்டம் 3. திஸ்ரம் 4. சங்கீர்ணம்

34. B இல் இடம்பெற வேண்டிய தாளம்
1. துருவம் 2. மட்டியம் 3. அட 4. ஜம்பை

35. C இல் இடம்பெற வேண்டிய அட்சர எண்ணிக்கை
1. 11 2. 16 3. 18 4. 14

36. படத்தில் காட்டப்பட்ட வாத்தியம் பயன்படுத்தப்படும் நடனம்

1. பரதநாட்டியம ´2. ஒடிசி 3. கதக் 4. கதகளி




37. படத்தில் காட்டப்பட்ட ரஸம்

1. விரம் 2. கருணை 3. பயானகம் 4. கோபம்



38. படத்தில் காட்டப்பட்ட கலைஞர்

1. வழுவூர் இராமையாப்பிள்ளை
2. மீனாட்சி சுந்தரம்பிள்ளை
3. பொன்னையா
4. வீரமணிஜயா



39. படத்தில் காட்டப்பட்ட அணிகலன் அணியப்படும் பக்கம்

1. வலது 2. இடது 3. முன் 4. பின்



40. படத்தில் காட்டப்பட்ட திருஷ்டி பேதம்

1. சமம் 2. பிரலோகிதம் 3. சாசி 4. துதம்



பகுதி II

- **முதலாம் வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. 1. பரதகுல பாக்கிய கலிகே என ஆரம்பிக்கும் ஸ்லோகம் எது?

2. அற்புத ரஸத்தின் ஸ்தாயி பாவத்தினை தருக.
3. சங்க காலத்தில் பெண்களால் ஆடப்படும் ஆடல் எது?
4. திரியாங்கங்களில் ஜாதி பேதமடையும் அங்கம் எது?
5. பிடில் எனப்படும் இசைக்கருவி எது?
6. நடனத்திற்காக இயற்றப்பட்ட வர்ணம் எது?
7. தளங்குதொம் எனும் சொற்கட்டினை உடைய பாதபேதம் எது?
8. சங்கமருவிய கால நடனமாதர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
9. நிருத்திய உருப்படிகள் இரண்டு தருக.
10. இரு கைகளிலும் முஷ்டி ஹஸ்தம் பிடித்து அபிநயிக்கக் கூடிய தசாவதார, நவக்கிரக ஹஸ்தங்களைக் குறிப்பிடுக. (12புள்ளிகள்)

Past Papers Wiki

2. i பரதநாட்டிய கச்சேரி அமைப்பு முறையில் சுத்த நிருத்த வகையைச் சார்ந்த உருப்படிகள் எவை? (2 புள்ளிகள்)

ii. அலாரிப்பின் இராகம், தாளம் என்பவற்றைத் தருக (2 புள்ளிகள்)

iii. அலாரிப்பின் இலட்சணத்தைத் தருக. (3 புள்ளிகள்)

iv. பரதநாட்டிய கச்சேரி அமைப்பில் முதலாவது உருப்படியின் தீர்மானப் பகுதியினை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. (5 புள்ளிகள்)

3. 1. பத்து அவதாரங்களையும் எடுத்த இறைவன் யார்? (1புள்ளி)

11. அவதாரம் எடுத்ததன் நோக்கத்தைக் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

111. பத்து அவதாரங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஐந்து அவதாரங்களை விளக்கி எழுதுக. (8 புள்ளிகள்)

4. பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களையும் அதன் கருத்தினையும் தருக.

1. ஸர்ப்பஸீஸம் 2. கபோதம் 3. ஷகடம் (3X4=12புள்ளிகள்)

5. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. பஞ்சபாணங்கள் 2. பாத்திரப்பிராணன் 3. சப்தம் (3X4=12புள்ளிகள்)

6. பல்லவர் காலக் கலை வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக. (12புள்ளிகள்)

7. 1. பரதநாட்டியத்திற்கு பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் நரம்பு வாத்தியம் எது? (1புள்ளி)

11. குறித்த வாத்தியத்தை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

1. தோற்றம் (4புள்ளிகள்)
2. அமைப்பு (4புள்ளிகள்)
3. சிறந்த கலைஞர்கள் (3புள்ளிகள்)

***

Past Papers Wiki



WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library